## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்கள் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கீட்டு நியமத்தால் வேண்டப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் தவிர ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படக் கூடாது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 13.46 மில்லியன் தொகையான செலுத்த வேண்டிய முகவர் தரகுக் கணக்கின் வரவு மீதிகள் அத்திகதியில் உள்ளவாறான ரூபா 45.15 மில்லியன் தொகையான செலவு மீதிக்கு எதிராகவும், ரூபா 14.3 மில்லியன் தொகையான வெளிநாட்டு செலாவணி இலாப நட்ட கணக்கின் செலவு மீதி அத்திகதியில் உள்ளவாறான ரூபா 984.74 மில்லியன் தொகையான செயற்பாட்டு செலவு கணக்கின் வரவு மீதிக்கு எதிராகவும் ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் கணக்குகளிலும் காட்டப்பட்டிருந்தன. | முகவர் தரகுக் கணக்கின் இணக்கம் செய்யப்படாத வரவு மீதியானது 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து முன் கொண்டுவரப்பட்ட பழைய மீதியொன்றாக காணப்படுகின்றது. வெளிநாட்டு செலாவணியிலிருந்து போதுமான இலாபத் தொகையொன்று கிடைக்கப் பெற்றால் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான வழுக்களை நிவர்த்தி செய்ததன் பின்னரே 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 36(அ) பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் கிரய சூத்திரம் உள்ளடங்களாக சரக்கிருப்புக்களை மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தப்படும் சூத்திரம் என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும், மருந்தகங்களில் இருக்கும் இருப்புக்கள் தொடர்பில் அவ்வாறான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கிரய சூத்திரமானது கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்பட வில்லை மற்றும் ஏனைய மருந்து சந்தைகளின் நிலைமை மற்றும் சந்தை விலையினை கருத்திற் கொண்டு மருந்து பொருட்களின் விலை தீர்மானிக்கப் படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான வழுக்களை நிவர்த்தி செய்ததன் பின்னரே 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 36(ஆ) மற்றும் 38 ஆம் பந்திகளின் பிரகாரம், வருங்கால கணக்கீட்டு மதிப்பீட்டின் விலையினை அடையாளம் | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் | மேற்கூறியவாறு. |

| | | |
|---|---|---|
| காண்பதற்காக மதிப்பீடு மாற்றம் செய்யப்பட்ட திகதியில் இருந்து கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய நிகழ்ச்சிகள் மற்றும் நிலைமைகள் போன்றவற்றிற்கு மதிப்பீடொன்று பயன்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட 2 மோட்டார் வாகனங்களினதும் ரூபா 2.79 மில்லியனான 6 மோட்டார் வாகனங்களினதும் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் மற்றும் நிகர பெறுமதியின் மாற்றத்தினுடைய கணக்கீட்டு விளைவினை கூட்டுத்தாபனம் அடையாளங் கண்டிருந்ததுடன் இது கடந்த காலங்களில் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | திருத்தமானது வழுவொன்றினை திருப்தி செய்வதாக கருதப்பட்டது. ஆனால் இது மதிப்பீட்டின் மாற்றமொன்றல்ல. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 749,212 தொகையான மருந்துப் பொருட்கள் இருப்பின் விலைப்பட்டியல் பெறுமதியானது கணக்குகளில் இரண்டு தடவைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக, வழிச் சரக்கு கணக்கு மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கு என்பன அதே தொகையால் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தன. | அடுத்து வரும் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது குறிப்பிட்ட கணக்கிடுதல் வழுவினை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அவ்வாறான வழுவினை நிவர்த்தி செய்ததன் பின்னரே 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக காணப்படுகின்ற இருப்புக்களின் கிரயம் ரூபா 873,304 ஆல் குறைவாக கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | தொடர்ந்து வைத்திருக்கப்பட்ட இருப்புக்கள் வருடாந்த இருப்பு உறுதிப்படுத்தலில் பயன்படுத்தப்படாத இருப்புக்கள் என அடையாளப் படுத்தப்பட்டன. | மேற்கூறியவாறு |
| (இ) 39 மருந்தகங்களுக்காக பெறுகை செய்யப்பட்டிருந்த 2019 திசெம்பர் 31 இல் களஞ்சியத்திற்கு கிடைக்கப் | இது ஆண்டிறுதியில் சேகரிக்கப்பட்டிருந்தது ஆகையால் விநியோகம் | மேற்கூறியவாறு |

| | | | |
|---|---|---|---|
| | பெற்ற ரூபா 20.62 மில்லியன் கிரயத்திலான மருந்துப் பொருள் இருப்புக்கள் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காலதாமதமாகியது. | |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 552,498 தொகையான தரக்குறைவான இருப்புக்களின் பெறுமதி இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | வழுவினை சரி செய்வதற்கான வாய்ப்பொன்று கோரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. | மேற்கூறியவாறு. |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மருந்தங்களில் மிகுதியாக காணப்பட்ட மருந்துப் பொருள் இருப்புக்களின் கிரயம் மற்றும் பரிமாற்றல் பெறுமதி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடானது அடையாளம் காணப்பட்டு அது வருமானம் ஈட்டப்படாததாக சீராக்கம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீதமுள்ள இருப்பின் கிரயமானது அடையாளப்படுத்தப் பட்டிருக்கவில்லை மற்றும் இருப்பு பரிமாற்றல் பெறுமதியில் 7.42 சதவீதத்திற்கு மாத்திரம் சமமான ரூபா 47.81 மில்லியன் ஏற்படானது உழைக்கப்படாத வருமானமாக ஆக்கப்பட்டிருந்தது. | கிரயமானது அடிப்படையொன்றாக எடுக்கப்படவில்லை மற்றும் தொடர்புடைய இலாப சதவீதத்தினால் கணிப்பிடப்பட்ட மதிப்பிடப்பட்ட பெறுமதியானது சராசரி இருப்பிலிருந்து பதிவழிப்பு செய்யப்படல் வேண்டும். | மருந்தகங்களில் காணப்பட்ட இருப்புக்களின் கிரயம் மற்றும் பரிமாற்றல் பெறுமதி ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாடானது அடையாளம் காணப்பட்டு அது உழைக்கப்படாத இலாபமாக சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | உப ஏடுகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| (அ) | மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெறவேண்டிய கடன்கள் | 27,855 | 27,988 | 133 | இணக்கம் செய்வதற்கான பெற வேண்டிய மீதியை மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து பெறுகின்ற நேரத்தில் | வேறுபாடு களிற்கான காரணங்கள் அடையாளம் காணப்பட வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்களில் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கூட்டுத்தாபனத்தின் இறுதிக் கணக்குகள் நாளதுவரையாக்கல் செய்யப்பட்டிருக்க வில்லை. | தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆயுர்வேத திணைக்களத் திடமிருந்து பெற வேண்டிய கடன்கள் | 1.6 | 0.87 | 0.73 | ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மீதியாக ரூபா 876,554 காணப்பட்டது என ஆயுர்வேத திணைக்களத்தால் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அது கூட்டுத்தாபனத்திற்கு தெரிவிக்கப்பட வில்லை. | -மேற்கூறியவாறு- |
| (இ) | மருந்தகங்களின் விற்பனைக்காக பெறுகை செய்யப்பட்டிருந்த 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தரக் குறைவான மருந்துப் பொருட்களின் பெறுமதி | 116.86 | 96.63 | 20.23 | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து கொள்வதற்கான புலனாய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் பதிவழிப்பு செய்வதற்கும் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காரணங்களை அடையாளம் காண்பதற்கும் நிதிப் பிரமாணங்களை பின்பற்றி சீராக்கங்களை மேற்கொள் வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பின் கிரயம் | 1479.1 | 1511.0 | 13.9 | ஜீவனி உற்பத்தி பிரிவினால் கணிப்பிடப்பட்ட கிரயம் மற்றும் கணினியால் உருவாக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள் ள கிரயம் என்பவற்றின் வேறுபாடு குறிப்பிட்ட வேறுபாட்டை பாதித்திருந்தது. கணனி மயப்படுத்தப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்ட சில | காரணங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான சீராக்கங்களை மேற்கொள் வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பொருட்களின் கிரயம் உள்ளடக்கப் படவில்லை மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்ட சில பொருட்களின் தொகையானது பௌதீக உறுதிப்படுத்தல் அறிக்கையின் தொகைகளிலிருந்து வேறுபட்டிருந்தது. |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை<br>ரூபா. மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வியாபார கடன் பட்டோர்களின் 149 மீதிகள் | 750.7 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கள் | முன்னைய கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | மீதிகளின் உறுதிப் படுத்தல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.5 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மருத்துவ வழங்கல் பிரிவிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 27,854.82 மில்லியன் தொகையில் ரூபா 211.59 மில்லியன் தொகையொன்று 10 ஆண்டுகளில் இருந்து 21 ஆண்டுகள் வரை முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது. | பொது திறைசேரியின் பழைய மீதிகளை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொது திறைசேரியின் முறையான அங்கீகாரத்துடன் பழைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) வியாபார கடன்பட்டோர் மீதிகளை விற்பனையின் 30 முதல் 45 நாட்களுக்குள் அறவிடுவது கூட்டுத்தாபனத்தின் கடன் கொள்கை ஆகும். அப்படி | 5 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதிக்கு மேலாக தனியார், அரசாங்க மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 12.79 மில்லியன் மீதியில், அரச வைத்திய சாலைகள் | கூட்டுத்தாபனத்தின் கடன் கொள்கை மற்றும் உடன்படிக்கைகளின் பிரகாரம் கடன்களை அறவீடு செய்தல் உரிய காலப்பகுதிக்குள் |

| | | | |
|---|---|---|---|
| இருப்பினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1341.85 மில்லியன் கடன்பட்டோர் மீதியில் 5 ஆண்டுகளுக்கு அதிகமான காலப்பகுதிக்கு மேலாக தனியார், அரசாங்க மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 12.79 மில்லியன் தொகையொன்றும் ஒரு வருடத்திற்கும் அதிகமான காலப்பகுதிக்கு மேலாக இலங்கை பாராளுமன்றத்திடமிருந்து ரூபா 14.62 மில்லியன் தொகையொன்றும் நிலுவையாகக் காணப்பட்டது. குறிப்பிட்ட தொகையிலிருந்து ரூபா 3.14 மில்லியன் தொகையொன்றினை மாத்திரம் அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய தொகை ரூபா 2.08 மில்லியனாக இருந்தது. ரூபா 3.14 மில்லியன் தொகையொன்றினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாராளு மன்றத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 14.62 மில்லியன் தொகையொன்றினை அறவிடுவதற்கு சபாநாயகர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகிய தொடர்புடைய தரப்பினர்களுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்த போதிலும், சாதகமான பதிலொன்று கிடைக்கப் பெறவில்லை. எனவே, மீள அறவிடுவதில் நிச்சயமற்ற தன்மை காரணமாக மொத்த பெறுமதிக்குமாக அறவிட முடியா மற்றும் ஐயக்கடன் ஏற்பாடொன்று செய்யப்பட்டது. | துரிதப்படுத்தப்பட வேண்டும். | |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு பிரச்சினை | இணங்காமை | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 103,104 மற்றும் 105 | (i) கூட்டுத்தாபனங்களிற்கு சொந்தமான 10 வாகனங்களுக்கு மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த 21 விபத்துக்களுடன் தொடர்புடைய பொறுப்புள்ள தரப்பினரை அடையாளம் காண்பதற்கும் ஆரம்ப கட்ட மற்றும் முழுமையான புலனாய்வினை நடத்துவதற்கும் தொடர்புடைய தரப்பினர்களுக்கு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த விடயம் தொடர்பில் செயல்படுகின்ற முறையினை விளக்கும் விரிவான அறிக்கையொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 74.21 மில்லியன் கிரயத்திலான மருத்துவ வழங்கல்களின் இருப்பு மற்றும் மீளாய்வாண்டிலும் முந்தைய ஆண்டிலும் காலாவதியான, ரூபா 385,531 கிரயத்திலான தவறவிடப்பட்ட மருத்துவ வழங்கல்களின் இருப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய நட்டத்தினை அறவீடு செய்வதற்கும் பொறுப்பினை சரிசெய்வதற்கும் புலனாய்வுகளை நடத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த விடயம் தொடர்பில் முறையாக பரிசீலனை செய்ததன் பின்னர நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | அரச வருமானத்திற்கு இரண்டு ஆண்டுகளை தாண்டிய 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1.91 மில்லியன் தொகையினை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது வைப்புக்களுக்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறக்குமதி பிரிவினால் உறுதிப்படுத்தப் பட்டதன் பின்னர் 3 ஆண்டுகளுக்கு மேல் உரிமை கோரப்படாத வைப்புக்களை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்கூறியவாறு |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

------------------------------------------------------------

| கணக்காய்வு பிரச்சினை | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான களஞ்சிசாலைகளில் காணப்படுகின்ற இருப்புக்களை கருத்திற் கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு மருந்தகங்களுக்காகவும் மருந்துகள் பெறுகை செய்யப்பட்டிருந்தன என்று 20 மருந்து பொருட்கள் மாதிரிகளுடன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக, பெறுகையினை அதிக விலைகளில் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் தள்ளுபடிகளின் நன்மைகளுக்கான சாத்தியமானது இழக்கப்பட்டிருந்தது அல்லது | ஒவ்வொரு பெறுகை மற்றும் அவதானிப்புக்களின் அடிப்படை விடயங்களை பரிசோதனை செய்ததன் பின்னர் குறிப்பிட்ட பதிலோன்றை வழங்குவதற்கும் எதிர் பார்க்கப்படுகின்றது. | ஒட்டுமொத்த தேவைப்பாட்டினை அடையாளப்படுத்திய பின்னர் தள்ளுபடிகளின் உச்ச நன்மைகளை பெற்றுக் கொள்வதற்காக பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் மருந்து பொருட்களின் காலாவதியான சாத்தியமானது குறைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 186,758 கிரயத்திலான 5 உருப்படிகள் காலாவதியாகியிருந்தன. | | |
| (ஆ) | ரூபா 619,720 கிரயத்திலான இருப்பொன்று 6 மாத காலப்பகுதிக்கும் மேலாக வழிச் சரக்கிருப்பாக காணப்பட்டது என்று 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வழிச் சரக்குகள் கணக்கின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. மருத்துவ வழங்கல் பிரிவினால் பெறப்பட்ட இருப்புக்களுக்கான வரவுத் தாள்களினை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவும் மருத்துவ வழங்கல் பிரிவினால் நிராகரிக்கப்பட்டதற்கான பிணக்கினை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதனாலும் அத்தகைய இருப்புக்கள் நீண்டகாலமாக வழிச்சரக்கிருப்பாக காணப்பட்டன. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | மருத்துவ வழங்கல் பிரிவினால் பெறப்பட்ட இருப்புக்களுக்கான வரவுத் தாள்களினை வழங்குவதில்ஏற்பட்ட தாமத்துக்கான காரணங்கள் மற்றும் இருப்புக்களை நிராகரிப்பதற்கான காரணங்களை அவதானிக்கக் கூடிய வகையில் முறைமையானது தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொள்கலன் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 11.74 மில்லியன் ஆகும் மற்றும் அவற்றில் ரூபா 6.44 மல்லியன் தொகையொன்று 2 வருடங்கள் முதல் 12 வருடங்கள் வரையிடையே அறவீடு செய்யப்படல் வேண்டும். குறிப்பிட்ட தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 5.44 மில்லியனுக்காக எந்த பணமும் அறவீடு செய்ய முடியாதிருந்தது. | 2 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை கருத்தில் கொள்ளும் போது, பதிவழிப்பு செய்வதற்காக அட்டவணைப் படுத்தப்பட்ட ரூபா 5.7 மில்லியன் தொகையொன்று பெறவேண்டிய தொகையான ரூபா 6.44 மில்லியனில் உள்ளடக்கப் பட்டிருந்தது. | கொள்கலன் வைப்பு கணக்குகளை அறவீடு செய்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய வங்கி பட்டியல்கள் கணக்கின் மீதி ரூபா 12,916.92 மில்லியன் ஆகும். இது 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியை கொண்ட ரூபா 34.28 தொகையான நாணயக் கடிதங்களின் 100 சதவீத | 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியை கொண்ட பெறுமதிகளை தீர்மானித்ததன் பின்னர் வருமானத்தினுள் எடுத்துக் | அவ்வாறான தொகைகளை உறுதிப்படுத்தியதன் பின்னர் வருமாத்தினுள் எடுத்துக் கொள்வதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி மற்றும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியை கொண்ட வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டிருக்காத ரூபா 104.22 மில்லியன ஆகியவற்றை கொண்டிருந்தது. | கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முகவர் தரகு கணக்கின் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 31.69 மில்லியன் ஆகும். இது 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியைக் கொண்ட தரகு ரூபா 6.65 மில்லியன் மற்றும் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியை கொண்ட உள்ளூர் தரகர்களுக்கு செலுத்தப்பட்டிருக்காத ரூபா 14.27 மில்லியன் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியைக் கொண்ட குறிப்பிட்ட கணக்கில் காணப்பட்ட ரூபா 13.46 மில்லியன் வரவு மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 3 வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட முகவர் தரகு கணக்கின் கோரப்படாத செலவு மீதிகளை வருமானமாக கணக்கினுள் எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். ரூபா 13.46 மில்லியன் தொகையான இணக்கம் செய்யப்படாத வரவு மீதியினை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏனென்றால் இது 2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே காணப்பட்டது. | நீண்டகாலமாக செலுத்தப்படாத முகவர் தரகினை வருமானத்தினுள் எடுப்பதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தரமற்ற, காலாவதியான மற்றும் சேதமடைந்த மருந்துகளின் மொத்த கிரயம் ரூபா 116.86 மில்லியனாகவும் மீளாய்வாண்டின் போதான தரமற்ற காலாவதியான மற்றும் சேதமடைந்த மருந்துகளின் மொத்த கிரயம் ரூபா 51.67 மில்லியனாகவும் இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போதான தரமற்ற மருந்து பொருட்களுடன் தொடர்பான ரூபா 24.63 மில்லியன் மொத்த | மீளாய்வாண்டின் போதான காலாவதியான மருந்துப் பொருட்களின் கிரயம் ரூபா 36.97 மில்லியனாகவும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போதான காலாவதியான மருந்துப் பொருட்களின் கிரயம் ரூபா 74.2 | வழங்குனர்களிடமிருந்து தரமற்ற மருந்துப் பொருட்களின் பெறுமதி அறவீடு செய்யப்படுதல் வேண்டும். காலாவதியான மருந்துப் பொருட்கள் தொடர்பில் தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் பொறுப்புடைய தரப்பினர்களிடமிருந்து நட்டங்கள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்தில் ரூபா 6.9 மில்லியன் தொகையொன்று 2020 மே 12 வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது மருந்துப் பொருட்கள் காலாவதியாதல் மற்றும் சேதமடைதல் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 83.79 மில்லியனாக இருந்தது. | மில்லியனாகவும் இருந்தது. | |
| (ஆ) | மருத்துவ வழங்கல் பிரிவுக்கு செய்யப்பட்ட தரமற்ற மற்றும் சேதமடைந்த மருந்துப் பொருட்களின் கிரயம் மற்றும் குறைவாக வழங்கல் செய்யப்பட்ட மருந்துப் பொருட்கள் மற்றும் நிர்வாக கிரயம் மற்றும் அவ்வாறான இருப்புக்களை அழிப்பதற்கான செலவுகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,839.15 தொகையொன்று வழங்குனர்களிடமிருந்து அறவீடு செய்யப்படுதல் வேண்டும். அந்த தொகையில் ரூபா 791.3 மில்லியன் தொகையொன்று 2020 யூன் 30 வரையிலும் அறவீடு செய்ய முடியாதிருந்தது. குறிப்பிட்ட மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 89.21 மில்லியன் தொகையொன்று கறுப்பு பட்டியலிடப்பட்ட வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். எனவே குறிப்பிட்ட தொகையினை அறவீடு செய்வது நிச்சயமற்றதாக இருந்தது. | பெரும்பாலான நேரங்களில், வழங்குனர்கள் தரமற்ற மற்றும் சேதங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை செய்வதுடன் இது தொடர்பாக நடுவர்களிடம் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, பொருட்களை பெறுகின்ற நேரத்தில் பொருட்களை பரிசோதனை செய்வதிலும் களஞ்சியப் படுத்துவதிலும் பொருத்தமான நியமங்கள் பின்பற்றப் படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வழங்குனர்களிடமிருந்து அறவீடு செய்யும் செயல்முறை விரைவுபடுத்தப்படல் வேண்டும். |
| (இ) | 2017, 2018 மற்றும் 2019 ஆண்டு காலப்பகுதிகளின் போது பல்வேறு காரணங்களுக்காக வழங்கப்படாமல் தக்க வைக்கப்பட்டிருந்த 21 வகையான இருப்புக்கள் தொடர்பாக ரூபா 16.22 மில்லியன் கிரயத்திலான இருப்புக்களில் 94,181 அலகுகளை விடுவிப்பதுடன் தொடர்புபட்ட தீர்மானங்களை 2020 மே 31 வரையிலும் எடுத்திருக்க முடியாமை காரணமாக இருப்புக்கள் காலாவதியாகுதல் மற்றும் சேதமடைதலின் இடரொன்று அவதானிக்கப்பட்டது. 2017 ஆகஸ்ட் முதல் தக்க வைக்கப்பட்டிருந்த ரூபா 739,931 கிரயத்திலான | வழங்குனர்களிட மிருந்து தொடர்புடைய கிரயம் அறவீடு செய்யப்பட்டது. | காலாவதியான மருந்துப் பொருட்கள் மற்றும் சேதமடைந்த மருந்துப் பொருட்களிலிருந்து ஏற்படும் நட்டங்களை குறைப்பதற்கு வழங்கப்படாமல் தக்க வைக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பிலான தீர்மானம் எடுக்கும் செயல் முறையினை துரிதப்படுத்துதுல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எரித்திரோமைசின் உலர் சிரப் (Erythromycin Dry Syrub) 125mg/5ml இன் 8,739 எண்ணிக்கையான அலகுகள் 2020 மே 20 அன்று இரத்மலானை களஞ்சியசாலைகளில் காலாவதியாகியிருந்தன. | | |
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது செயற்பட்டு வந்த 40 மருந்தகங்களில் 24 மருந்தகங்களினால் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 45.13 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது செயற்பட்டு வருகின்ற 46 மருந்தகங்களில் 15 மருந்தகங்களால் ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 22.41 மில்லியனாக இருந்தது. | சில மருந்தகங்கள் இலாபகரமற்ற வளாகங்களில் அமைந்திருந்த போதிலும், பொது மக்களின் நலநன கருத்தில் கொண்டு அவ்வாறான பகுதிகளில் அவை நடாத்தப்பட வேண்டியிருந்தன. | நட்டங்களை குறைப்பதற்கும் இலாபங்களை உழைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**2.3 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ வழங்கல் பிரிவிற்கான உள்ளூர் அவசர கொள்வனவில், அரச பெறுகை வழிகாட்டியின் 5.3.11 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பிணை முறியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. மற்றும் 5.4.10(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றுகை பிணை முறியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மற்றும் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையொன்றினை செய்து கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட பிரிவிற்காக பின்பற்றியிருக்க வேண்டிய கொள்வனவிற்கான நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பன தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் இது தொடர்பில் எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முழு ஆண்டுக்கும் செல்லுபடியாகும் ஒரு நிலையான பிணை முறியினையும் செயலாற்றுகை பிணை முறியினையும் உள்ளூர் அவசர கொள்வனவிற்காக கேள்வி மனுதாரர்கள் சமர்ப்பித்திருந்தார்கள் என குறிப்பிடப் படுகின்றது. உள்ளூர் மற்றும் அவசர கொள்வனவிற்கு பின்பற்றப்பட வேண்டிய முறையொன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், அந்த ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை கற்றறிந்ததன் பின்னர் சுட்டிக் காட்டப்பட்ட இணக்கமின்மைகளை தவிர்ப்பதற்குமாக நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட முறைமையொன்றை ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அவசர மற்றும் உள்ளூர் கொள்வனவிற்காக பின்பற்றப்பட வேண்டிய கொள்வனவு நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் வரையறுக்கப்பட வேண்டியதுடன் முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் அல்லது வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | Herticad என்ற வர்த்தக பெயரின் கீழ் வழங்குனர் ஒருவரிடமிருந்து ரூபா 891.18 மில்லியன் தொகையொன்றினை செலவு செய்து 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக 14 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட 20ml கரைப்பான குப்பிகளுடனான 440mg Trastuzumap ஊசி மருந்து 8,945 இன் கொள்வனவு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 14 பெறுகைகளின் 13 நிகழ்வுகளில் பெறுகை பெறுமதியானது ரூபா 50 மில்லியனை விட விஞ்சியமை காரணமாக 2 நிபுணர்கள் உள்ளடங்கலாக 5 அங்கத்தவர்களை கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று தொடர்நுட்ப மதிப்பீட்டுக்காக சுகாதார அமைச்சினால் நியமனம் செய்யப்படல் வேண்டுமென்ற போதிலும், கூட்டுத்தாபனமானது குறிப்பிட்ட பெறுகைக்காக 3 அங்கத்தரவ்களை கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்றினை நியமனம் செய்திருந்தது. அத்துடன் குறிப்பிட்ட குழுவிற்காக எந்தவொரு நிபுணர்களும் நியமனம் செய்யப்பட்டிருக்க வில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டிற்காக 5 உறுப்பினர்களை கூட்டத்திற்கு அழைப்பது நடைமுறையில் முடியாதிருக்கின்றது ஏனென்றால் உள்ளூர் மற்றும் அவசர கொள்வனவுகளின் கேள்வி மனுக்களை மதிப்பீடு செய்வதற்கு தொழில்நுட்ப பிரிவுக்கு 3 நாட்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுகிறது. விசேடமாக, அவ்வாறான கூட்டங்களுக்காக சிரேஷ்ட நிபுணர்களை அழைப்பது கடினமானதாக இருக்கிறது ஏனென்றால் அவர்கள் ஓய்வு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எனவே, அவ்வாறான விடயங்களை கருத்திற் கொண்டு, தாமதமின்றி நோயாளர்களுக்கு மருந்துப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதன் தேவையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்காக வைத்தியர் ஒருவரின் பரிந்துரையினை பெற்றுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தின் தலைவரின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. பெறுகைகளின் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்காக நிபுணர்களை பெயர் | அரசாங்க பெறுகை வழிகாட்டி மற்றும் அவற்றின் அவ்வவ்போதான நாளதுவரையாக்கல் செய்யப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் பெறுகையானது நிருவகிக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகளை அலட்சியம் செய்ததன் விளைவாக ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பன அந்த விடயங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு மிகைக் கட்டணம் விதிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடுவதற்கான வெளிப்படையான வழிமுறையொன்று கிடைக்கவில்லை. | |
| (ii) | திணைக்கள பெறுகை குழுவின் தலைவராக உள்ள கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் தொழில்நுட்ப உதவிக்காக ஒரு நிபுணர் மாத்திரம் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். பரிந்துரையின் அடிப்படையில் ஒரே ஒரு நிபுணரின் உதவியானது 13 தொழில்நுட்ப குழுக்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிபுணரினால் வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது அவர்களின் பரிந்துரையினை சமர்ப்பித்திருந்தது. | 2 நிபுணர்களை உள்ளடக்கிய 5 அங்கத்தவர்களைக் கொண்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறையில் கொண்டிருக்க முடியாதிருந்தது. ஏனென்றால் அவரச கொள்வனவின் தொழில்நுட்ப மதிப்பீட்டினை மிகக் குறுகிய காலப்பகுதியினுள் நிறைவு செய்ய வேண்டியிருந்தது. அதற்கிணங்க, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக வைத்தியரொருவரின் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கான தலைவரின் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | அவ்வாறான ஏற்பாடுகளை அலட்சியம் செய்ததன் விளைவாக ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பன அந்த விடயங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு மிகைக் கட்டணம் விதிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 14 பெறுகைகளில் 6 பெறுகைகள் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீடுகள் நிபுணர் ஒருவரால் செய்யப்பட்டிருந்தன மற்றும் ஏனைய 2 பெறுகைகள் ஏனைய 2 நிபுணர்களால் செய்யப்பட்டிருந்தன. | அவசர கொள்வனவின் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கான நிபுணர்களை நியமிப்பது திணைக்களத் தலைவரால் செய்யப்படுவதுடன், நியமனம் செய்யப்பட்ட நிபுணர்களினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் பெறுகைக் குழுவின் தீர்மானமெடுப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டது. | -மேற்கூறியவாறு- |
| (iv) | பெறுகை வழிகாட்டியின் ஏற்பாடுகளின் பிரகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு உதவும் நிபுணர் குறிப்பிட்ட மருந்துடைய முன் அனுபவம் கிடைக்கப்பெறாமை காரணமாக கேள்வி மனுக்களை நிராகரிக்க அனுமதிப்படுவதில்லை. எவ்வாறாயினும், குறைந்த விலை மனுதாரரின் உற்பத்திகளை பயனப்டுத்தியிருக்கவில்லை என்று நிபுணரினால் வழங்கப்பட்ட | புற்று நோய்க்கான மருந்துகளை பெறுகை செய்யும் செயல்முறையில் நிபுணர் ஒருவரின் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதின் நோக்கமானது மருத்தின் பயன்பாடு மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பிலான நிபுணரின் அறிவு மற்றும் அனுபவத்தின் | இந்த பெறுகை தொடர்பான புலனாய்வினை மேற்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைகளின் அடிப்படையில் 14 கொள்வனவுகளுடன் தொடர்புபட்ட குறைந்த கேள்வி மனுக்கள் பெறுகை குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தன. குறைந்தகேள்வி மனுக்களை நிராகரித்தமை காரணமாக ரூபா 230.86 மேலதிக கிரயமொன்றினை கூட்டுத்தாபனத்தால் செய்ய வேண்டியிருந்தது. | அடிப்படையிலான மதிப்பீடொன்றினை பெற்றுக் கொள்வதாக இருக்கின்றது. இந்த புற்று நோய்க்கான மருந்துகள் அதிகமான பக்க விளைவுகளையும் ஏனைய தீங்கு விளைவிக்கும் விளைவுகளையும் கொண்டுள்ளன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நிபுணரின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயற்படுவதை தவிர வேறு எந்த பதலீடுகளும் இல்லை. | |
| (v) | Herticad என்ற வர்த்தக பெயரின் கீழ் பெயரிப்பட்ட Trastuzumab மருந்தானது 2016 பெப்ரவரி 18 அன்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் முதன்முதலாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் அது தொடர்ச்சியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. முன் அனுபவம் கிடைக்கப் பெறாமை காரணமாக குறைந்த கேள்வி மனு நிராகரிக்கப்பட்டிருந்தால் 2016 ஆம் ஆண்டில் Herticad என பெயரிடப்படும் மருந்தினை கொள்வனவு செய்வதற்கான சாத்தியம் இருந்திருக்காது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | -மேற்கூறியவாறு- |
| (vi) | 440mg Trastuzumab ஊசிக்கான உச்ச கட்டுப்பாட்டு விலையொன்று அலகுக்கு ரூபா 95,000 படி 2018 ஆகஸ்ட் 31 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலினால் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 04 இல் வழங்கப்பட்ட கொள்வனவுக் கட்டளை தொடர்பில் அலகொன்றிற்கு ரூபா 135,900 படி 500 அலகுகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 20.45 மில்லியன் தொகையொன்று கட்டுப்பாட்டு விலையை விஞ்சியதாக செலுத்தப்பட்டிருந்தது. | மருந்தின் கேள்வி விலையானது அங்கீகரிக்கப்பட்ட திகதியான 2018 ஆகஸ்ட் 23 க்கு பின்னரே கட்டுப்படுத்தப்பட்டது. அப்போதைய தலைவரின் ஆலோசனையின் பேரில் (பெறுகை குழு தலைவர்) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அறுவுறுத்தல்களினை பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | இந்த பெறுகை தொடர்பான புலனாய்வினை மேற்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டில் அலகுக்கு ரூபா 18.72 பிரகாரம் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக 500mg cefriaxone ஊசி மருந்துகளின் 80,000 குப்பிகளை கொள்வனவு செய்வதற்காக பிரதான கொள்வனவுக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் விநியோகமானது தாமதமாகியிருந்தது. குறிப்பிட்ட காலதாமதமான விநியோகத்தின் விளைவாக ஏற்பட்ட இருப்புப் பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக குப்பியொன்று ரூபா 490 படி குறிப்பிட்ட மருந்தில் 10,998 அலகுகள் உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. அதற்கிணங்க ரூபா 5.18 மில்லியன் மேலதிக கிரயமொன்றினை கூட்டுத்தாபனத்தால் செய்ய வேண்டியிருந்தது. வழங்குனரி காலதாமதத்தினால் ஏற்பட்ட மேலதிக கிரயத்தினை கட்டளையின் நிபந்தனையின் பிரகாரம் வழங்குனரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்குனருக்கு பிரதான கொள்வனவு கட்டளையுடன் தொடர்புடைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலதிக கிரயத்தினை அறவீடு செய்வதற்காக பிரதான கட்டளையின் மொத்த தொகையினை விஞ்சியதாக வரவுத் தாளொன்று வழங்கப்பட்டதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வழங்குனரிடமிருந்து மேலதிக கிரயத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டிற்கான தேவைப்பாடாக 2 மில்லியன் 750mg USP ஊசி மருந்து குப்பிகள் அடையாளப்படுத்தப்பட்டிருந்தன மற்றும் குறிப்பிட்ட அளவினை கொள்வனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் பிரதான கொள்வனவு கட்டளையொன்று அலகுக்கான கிரயம் ரூபா 29.46 ஐ உள்ளடக்கிய ரூபா 58.93 மில்லியன் மொத்த கிரயத்தில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2018 யூலை 18 இல் குறிப்பிட்ட மருந்தின் 2,000,000 குப்பிகள் வழங்குனரால் வழங்கல் செய்யப்பட்டிருந்தன மற்றும் 1,914,500 குப்பிகளுக்கு மாத்திரம் ரூபா 58.52 மில்லியன் விலைப்பட்டியலொன்று அனுப்பப்பட்டிருந்தது. 85,500 குப்பிகளின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையினை விஞ்சிய தொகையானது மருத்துவ வழங்கல் பிரிவினால் பெறப்பட்டிருக்கவில்லை மற்றும் குறிப்பிட்ட இருப்பானது வழங்குனரால் மீள எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ வழங்கல் பிரிவினால் விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையினை விஞ்சியதாக வழங்கல் செய்யப்பட்டிருந்த 85,500 குப்பிகளை நிராகரித்தமையால் இந்ந நிலைமை ஏற்பட்டது. | இந்த பெறுகை தொடர்பான புலனாய்வினை மேற்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனவே, அவை தனியார் களஞ்சிய சாலைகளில் வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2.51 மில்லியன் கிரயத்திலான 85,500 குப்பிகளின் இருப்பினை பயன்படுத்த முடியாததாகிவிட்டது. | | |
| (ii) | வழங்கல் செய்யப்பட்ட 1,914,500 குப்பிகளில் 100,000 குப்பிகளை விநியோகிப்பது நிறுத்தப்பட்டிருந்தது. ஏனென்றால் அவை ஐக்கிய அமெரிக்க மருந்தியல் நியமத்தினை உறுதிப்படுத்தவில்லை. இது தொடர்பில் வழங்குனரிடமிருந்து அறவீடு செய்திருக்க வேண்டிய ரூபா 2.94 மில்லியன் தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2018 யூலை 18 இல் 1,914,500 குப்பிகள் வழங்கல் செய்யப்பட்டிருந்த போதிலும், 2019 ஏப்ரல் 05 அன்று விநியோகம் நிறுத்தப்பட்டது. | -மேற்கூறியவாறு- |
| (iii) | விலைப்பட்டியலில் உள்ளடக்கப்படாத ஆனால் 2018 யூலை 18 இல் விநியோகிக்கப்பட்ட 85,500 குப்பிகளை (vials) மருந்துகள் விநியோகப் பிரிவு கையேற்றிருக்காமை காரணமாக ஏற்பட்ட இருப்பு பற்றாக்குறை காரணமாக ஏற்பட்ட இருப்புப் பற்றாக்குறை, 2019 ஏப்ரல் 05 இல் 100,000 குப்பிகள் தரமற்றுக் காணப்பட்டமை மற்றும் 2019 ஆம் ஆண்டின் தேவைப்பாட்டிற்கான பெறுகையின் தாமதங்கள் போன்வற்றை தவிர்கும் பொருட்டு உள்ளூர் சந்தையிலிருந்து 375,000 குப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அலகொன்று ரூபா 29.46 மில்லியன் ஆக 2018 ஆம் ஆண்டின் தேவைப்பாட்டிற்கான பிரதான கட்டளையினை விநியோகித்திருந்த உள்நாட்டு விநியோக முகவரிடமிருந்து அலகொன்று ரூபா 125.50 ஆக 352,000 குப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் மற்றுமொரு வழங்குனரிடமிருந்து அலகொன்று ரூபா 190 ஆக 23,000 குப்பிகள் கொள்வனவு செய்யப்பட்டமை காரணமாக ரூபா 37.49 மில்லியன் மேலதிக கிரயமொன்று ஏற்பட்டிருந்தது. 85,500 குப்பிகள் இருப்பினை கையேற்பதற்கு தரமற்ற 100,000 குப்பிகளுக்குப் பதிலாக புதிய 100,000 குப்பிகளினைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது நிதியினை மீள அறவிடுவதற்கு மற்றும் தாமதமின்றி 2019 ஆம் ஆண்டின் தேவைப்பாட்டிற்கான பெறுகைகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் | மீளாய்வாண்டின் போதான 375,000 குப்பிகளின் கொள்வனவு பிரதான கட்டளை தாமதத்தின் பின்னரான விளைவொன்றாகக் காணப்படவில்லை. ஆகையினால் 375,000 குப்பிகளின் கொள்வனவுடன் தொடர்புடைய மேலதிக கிரயம் குறித்த விநியோகத்தரிடமிருந்து அறவிட முடியுமானதாகக் காணப்படவில்லை. USP நியமத்துடன் இணங்காமை காரணமாக இடைநிறுத்தப்பட்டுக் காணப்பட்ட 100,000 குப்பிகளின் விநியோகம் தொடர்பில் தரமற்ற மருந்தகங்களுக்காக தற்போது பின்பற்றப்படும் நடைமுறையின் பிரகாரம் அறவிடுகைகள் மேற்கொள்ளப்படும். | இந்த பெறுகை தொடர்பில் முறையானதொரு புலனாய்வினை மேற்கொண்ட பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்குமாக இருந்தால் இந்த மேலதிக கிரயத்தினை இழிவுபடுத்த முடியுமாகவிருந்திருக்கும். எவ்வாறாயினும், அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டின் போது ரூபா 70.98 மில்லியன் கட்டளைக் கிரயத்தில் Bavacizumrb Injection 100mg இன் 2,127 குப்பிகளின் கொள்வனவுக்காக இரண்டு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | பெறுகையின் பெறுமதி ரூபா 50 மில்லியனை மிகைத்திருப்பதன் காரணமாக தொழில்நுட்ப மதிப்பாய்விற்காக சுகாதார அமைச்சினால் 2 நிபுணர்கள் உள்ளடங்கலாக 5 உறுப்பினர்களை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், இந்தப் பெறுகைக்காக கூட்டுத்தாபனத்தினால் 3 உறுப்பினர்களினை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்த தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுக்காக எவ்வித நிபுணர்களும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு மற்றும் அவசர கொள்வனவுகளில் விலைமனு மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப பிரிவிற்கு 3 நாட்கள் காலப்பகுதியொன்று மாத்திரம் அனுமதிக்கப்பட்டதன் காரணமாக, தொழில்நுட்ப மதிப்பாய்விற்காக நடைமுறை ரீதியில் கூட்டத்திற்கு 5 உறுப்பினர்களினை அழைப்பதற்கு முடியாததாகக் காணப்பட்டது. | அரச பெறுகை வழிகாட்டல் மற்றும் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப் படுகின்ற திருத்தகங்களின் பிரகாரம் பெறுகை முகாமை செய்யப்படல் வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகளின் அலட்சியமொன்றின் விளைவாக ஏற்படுகின்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் குறித்த விடயத்திற்குப் பொறுப்பாகக் காணப்படும் உத்தியோகத் தரிடமிருந்து மிகைக் கட்டண அறவீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரினால் தொழில்நுட்ப உதவிக்காக ஒரு நிபுணர் மாத்திரம் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுக்காக பரிந்துரைக்கப்பட்ட ஒரு நிபுணரின் உதவி மாத்திரம் பெறப்பட்டிருந்தது. குறித்த நிபுணரினால் வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அவர்களின் பரிந்துரையின் சமர்ப்பித்திருந்தனர். | தலைவர் 2018 கடமைக்கு சமூகமளித்திருக்கவில்லை. ஆகையினால், மருந்துகளின் அவசர தேவைப்பாட்டினைக் கருத்திற் கொண்டு பொது முகாமையாளரினால் நிபுணர் பரிந்துரைக்கப்பட்டார். பின்னர், தொழில்நுட்ப மதிப்பாய்விற்காக ஒரு மருத்துவரின் பரிந்துரையினைப் பெற்றுக் கொள்வதற்கு கூட்டுத்தாபன தலைவரின் அங்கீகாரம் | -மேற்கூறியவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | | பெறப்பட்டது. பெறுகைகளின் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்காக நிபுணர்களின் பெயரிடுவதற்கு வெளிப்படைத் தன்மையான முறைமையொன்று காணப்படவில்லை. | |
| (iii) | பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம், குறிப்பிட்ட மருந்தொன்றின் முன்னைய அனுபவம் காணப்படாமை காரணமாக விலைமனுக்களினை இரத்துச் செய்வது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு உதவிபுரிகின்ற நிபுணர்க்கு அனுமதியளிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், முதலாவது குறைந்த விலைமனுதாரரிடமிருந்து 532 குப்பிகளினைக் கொள்வனவு செய்வது மற்றும் இரண்டாவது குறைந்த விலைமனுதாரரிடமிருந்து 1,595 குப்பிகளினை கொள்வனவு செய்வது நிபுணரினால் வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் பெறுகைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அந்த குறைந்த விலைமனுதாரரின் உற்பத்திகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. குறைந்த விலைமனுதாரரினை நிராகரித்தமை காரணமாக அலகொன்று ரூபா 6,500 ஆக 1,595 அலகுகளினைக் கொள்வனவு செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 10.36 மில்லியன் மேலதிக கிரயமொன்று ஏற்பட்டிருந்தது. | குறித்த பெறுகைக்காக குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த விநியோகஸ்தர்க்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளினைப் பற்றி எவ்வித அனுபவமும் காணப்படவில்லை என நிபுணர் பரிந்துரைத்திருந்தார். ஆகையினால், நோயாளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு, அவசர விநியோகத்திற்காக இரண்டாவது குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த விலைமனுதாரரிடமிருந்து கொள்வனவினை மேற்கொள்ள வேண்டிக் காணப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாத மேலதிக கிரயம் ஏற்படக்கூடும். | -மேற்கூறியவாறு- |
| (iv) | தொடர்புடைய மருந்துக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையில் விலைமனுக்களினை சமர்ப்பித்திருந்த இரண்டு விநியோகத்தர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், TGA அவுஸ்ரேலியா நிறுவனத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற குறைந்த விலைமனுவின் மாதிரிகளினை மாத்திரம் பரீட்சிப்பதற்கு பெறுகைக்குழு தீர்மானித்திருந்தது. குறைந்த விலைமனுதாரர்க்கு மேற்குறித்த தீர்மானத்தினை அறிவிப்பதற்கு இருபத்து எட்டு நாட்கள் எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகைத் தீர்மானம் பற்றி விலைமனுதாரர்க்கு அறிவிப்பதற்கு காலமெடுக்கும். | -மேற்கூறியவாறு- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது, ரூபா 79.2 மில்லியன் கட்டளைக் கிரயத்தில் 180,000 கிலோகிராம் Tropical Chlorinated Lime (TCL) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | பெறுகையின் பெறுமதி ரூபா 50 மில்லியனை மிகைத்திருப்பதன் காரணமாக தொழில்நுட்ப மதிப்பாய்விற்காக சுகாதார அமைச்சினால் 2 நிபுணர்கள் உள்ளடங்களாக 5 உறுப்பினர்களினை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், இந்தப் பெறுகைக்காக கூட்டுத்தாபனத்தினால் 3 உறுப்பினர்களினை உள்ளடக்கிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்த தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுக்காக எவ்வித நிபுணர்களும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கட்டளையின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 20.17 மில்லியானகக் காணப்பட்டதுடன், தலைவரினால் பரிந்துரைக்கப்பட்ட 4 உறுப்பினர்களிடையே, ஒரு நிபுணர் எழுமாற்றமாக தொழில்நுட்ப பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் அடுத்த ஆண்டிலிருந்து தொழில்நுட்ப மதிப்பாய்வுகளுக்காக நிபுணர் சேவை சபையினால் நிபுணர்கள் குழுவொன்று பரிந்துரைக்கப்படும். | அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகைகள் முகாமை செய்யப்படல் வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகளின் அலட்சியமொன்றின் விளைவாக ஏற்படுகின்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் குறித்த விடயத்திற்குப் பொறுப்பாகக் காணப்படும் உத்தியோகத்தர் ரிடமிருந்து மிகைக் கட்டண அறவீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும், இந்த பெறுகை தொடர்பில் முறையானதொரு புலனாய்வினை நடாத்திய பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு ஏதேனும் வெளியக போதனையாளரின் உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியுமான போதிலும், Tropical Chlorinated Lime இன் பெறுகை விலைமனுக்கள் மதிப்பீட்டிற்காக நுண் உயிரியல் நிபுணர் ஒருவர்க்கு அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறித்த விலைமனு மதிப்பீட்டிற்கான நிபுணரின் தெரிவு நடைமுறையுடன் தொடர்புடைய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் நிபுணருக்கு நியமனக் கடிதமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். எவ்வாறாயினும், குறித்த நிபுணர் சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்கள் பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். | -மேற்கூறியவாறு- |
| (iii) | பெறுகை செயன்முறையில், நிபுணர் ஒருவரினால் நிறைவேற்றப்பட்ட சேவையொன்று தொழில்நுட்ப | விலைமனுக்கள் மதிப்பீட்டின் பொதுவான நடைமுறையாக தாழ்ந்த பெறுமதிகளினை | -மேற்கூறியவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பாய்வுக் குழுவின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், குறித்த விலைமனு மதிப்பீடு குறித்த நிபுணரினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | யுடையவை, விலைமனுவுடன் தொடர்புடைய விசாரணை மற்றும் ஏனைய தொழில்நுட்ப குறிப்புரையின் பின்னர் கைதேர்ந்தோரின் கருத்திற்காக நிபுணரொருவர்க்கு சமர்ப்பிக்கப்படும். தொடர்புடைய உதவி வழிகாட்டல் நிபுணர்க்கு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. | |
| (iv) | ஒரு கிலோகிராம் TCL இற்கான ரூபா 343.85 ஆன குறைந்த விலைமனு எவ்வித நியாயமான மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க காரணமும் வழங்காது தொழில்நுட்ப மதிப்பீட்டினை மேற்கொண்ட நிபுணரினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. உற்பத்தி சிட்டை, பயன்படுத்துனர்களுக்கான அறிவுறுத்தல்கள், பாதுகாப்பு தரவு மற்றும் ஆபத்து குறியீடு போன்ற காரணங்களின் அடிப்படையில் விலைமனு நிராகரிக்கப்பட முடியாத போதிலும், கேள்வி விலைமனு ஆவணங்கள் அல்லது வேண்டப்படுகின்ற விபரக் குறிப்புக்களில் அவ்வாறான தேவைப்பாடுகள் குறிப்பிடப்பட்டிருக்காமை காரணமாக பூர்த்தியாக்கப்பட்டுக் காணப்படவில்லை. அத்துடன் பூர்த்தியாக்கப்பட்டுக் காணப்படவில்லை, அத்துடன் பூர்த்தியாக்கப்பட்டுக் காணப்படாத அவ்வாறான 4 தேவைப்பாடுகளின் அடிப்படையில் குறித்த நிபுணரினால் குறைந்த விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. மேலும், SLS 759-1986 நியமத்தில் ஆபத்து குறியீட்டின் (Hazards Mark) தேவைப்பாடொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய பிரிவு நிபுணரின் நிபுணத்துவ அபிப்பிராயத்தின் அடிப்படையில் பரிந்துரையின் தீர்மானம் தங்கியுள்ளது. உற்பத்தி சிட்டை மற்றும் பயன்படுத்துனர்களுக்கான, அறிவுறுத்தல்கள் என்பன அடிப்படையான மூலக் கூறாகக் காணப்படுகின்றதுடன், அது உற்பத்தியொன்றில் கட்டாயம் வெளிப்படுத்தப் படல் வேண்டும். அது இந்த வகைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இந்த தேவைப்பாடு அச்சிடப்பட்ட நிபந்தனை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | -மேற்கூறியவாறு- |
| (v) | TCL இற்காக மருத்துவ விநியோகப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட விபரக் குறிப்புக்களின் பிரகாரம், Tropical chlorinated lime BP இல் 30 சதவீதத்தினை விடக் குறையாத chlorine சதவிகிதம் உள்ளடக்கப்படல் வேண்டும். குறைந்த | கேள்வி விலைமனு நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டள்ள விடயங்கள் நிபுணரின் அபிப்பிராயத்தினை உள்வாங்கும் பொழுது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. | -மேற்கூறியவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | விலைமனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் தொடர்பில் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தரப் பரீட்சிப்பு அறிக்கையின் பிரகாரம், மாதிரியில் உள்ளடக்கப்பட்ட chlorine இன் சதவீதம் 39.4 சதவீதமாகக் காணப்பட்டது. ஆகையினால் அந்த விலைமனுவினை ஏற்றுக் கொள்வதற்கு எவ்வித தடைகளும் காணப்படவில்லை. விலைமனு மதிப்பீட்டு அறிக்கையில் குறைந்த விலைமனு வேண்டப்படுகின்ற விபரக் குறிப்புரைகளுடன் இணங்கிக் காணப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், எவ்வாறான விபரக் குறிப்புக்கள் இணங்கிக் காணப்படவில்லை என்பது குறிப்பாக குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | எவ்வாறாயினும், உலக சுகாதார ஸ்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்காக அடுத்த ஆண்டிலிருந்து கட்டளை விதிக்கான தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட வுள்ளதுடன் அனைத்து தொழில்நுட்ப மதிப்பீகளும் அதனடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். | |
| (vi) | நிபுணரின் பரிந்துரையின் அடிப்படையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் 1Kg TCL க்கு ரூபா 440 படி உச்ச கேள்வி மனுவினை சமர்ப்பித்திருந்த கேள்வி மனுதாரருக்கு பெறுகையினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக ரூபா 17.3 மில்லியன் மேலதிக கிரயமொன்றினை கூட்டுத்தாபனத்தால் செய்ய வேண்டியிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மிகக் குறைந்த விலைமனுவை நிராகரிப்பதன் மூலம் மற்றுமொரு கேள்வி மனுவினை சமர்ப்பித்திருந்த வழங்குனருக்கே கேள்வியானது வழங்கப்படுகின்றது. மிகக் குறைந்த கேள்வி மனுதாரருக்கே கேள்வியானது வழங்கப்பட்டது. | -மேற்கூறியவாறு- |
| (vii) | 2020 மே 19 அன்று மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு விசாரணையில், பெறுகை வழங்கப்பட்ட வழங்குனரால் வழங்கல் செய்யப்பட்ட இரசாயனத்தில் 70 சதவீதம் முதல் 75 சதவீதம் வரைய குளோரின் சேர்க்கப்பட்டுள்ளது என்று பெயர் சிட்டையில் (label) குறிப்பிடப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது.<br>வழங்கல் செய்யப்பட்ட உருப்படிகளில் Tropical Chlorinated lime சொற்கள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. மற்றும் அந்த சொற்களுக்குப் பதிலாக Chiornated lime Bp மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தது.<br>அதற்கிணங்க, கூட்டுத்தாபனத்தால் கட்டளையிடப்பட்ட Tropical | சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், Tropical Chlornate Lime (TCL) மற்றும் Clorinated Lime என்பன ஒரு உருப்படிகளுக்கு பயன்படுத்தப்படும் பெயர்களாகும். | -மேற்கூறியவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | Chlorinated Lime (TCL) ற்கு பதிலாக பெயர் சிட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள படி 70 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை குளோரின் சேர்க்கப்பட்டள்ள calcium hypochiorite வழங்குனரால் வழங்கல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வின் தேவைப்பாட்டின் படி இருப்புக்களில் இருந்து எடுக்கப்பட்டிருந்த மாதிரிகளை பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னர் தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் வழங்கல் செய்யப்பட்ட இருப்புக்களில் சேர்க்கப்பட்டிருந்த குளோரின் 66.5 சதவீதமாகும். | | |
| (viii) | மேலும், 2018 ஆம் ஆண்டில் Tropical Chiornated Lime (TCL) இன் பெறுகையின் தொழில்நுட்ப மதிப்பீட்டில், முன்னைய ஆண்டுகளின் உற்பத்திப் பொருட்களை வழங்கல் செய்த அதே உற்பத்தியாளரின் உற்பத்திப் பொருட்களுக்காக மிக குறைந்த கேள்வி மனுவினை சமர்ப்பித்திருந்த கேள்வி மனுதாரர் உற்பத்தி பெயர் சிட்டை கிடைக்கவில்லை, பாதுகாப்பு தரவுகள் கிடைக்கவில்லை, பயன்பாட்டாளர்களுக்கான அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லை, ஆபத்து குறியீடுகள் கிடைக்கவில்லை மற்றும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றமை என்பவற்றை குறிப்பிட்டு நிராகரிக்கப்பட்டிருந்தார் மற்றும் மிக உயர்வான கேள்வி மனுதாரர் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.<br>அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் மிக குறைவான கேள்வி மனுவை நிராகரித்தமை காரணமாக ரூபா 39.58 மில்லியன் மேலதிக கிரயமொன்றினை கூட்டுத்தாபனத்தால் செய்ய வேண்டியிருந்தது. | பரிந்துரையின் தீர்மானமானது தொடர்புடைய பிரிவிற்கான நிபுணரின் நிபுணத்துவ அபிப்பிராயத்தின் அடிப்படையில் இருந்ததுடன் மிகவும் பதிலளிக்க கூடிய கேள்வி மனுதாரருக்கே கொள்வனவு வழங்கப்பட்டது. | இந்த பெறுகை தொடர்பான முறையான புலனாய்வினை மேற்கொண்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ix) | ஆரம்ப கட்ட கட்டளையின் பிரகாரம், 2020 மே யில் 120,000 கிலோகிராம் Tropical Chlorinate lime (TCL) வழங்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2020 மே 19 வரையிலும் வழங்குனரால் 25,200 கிலோகிராம் calcium hypochlorite மாத்திரம் வழங்கல் செய்யப்பட்டிருந்தன என்று 2020 மே 20 இல் | ஆவணங்களின் பிரகாரம் வழங்கல் செய்யப்பட்ட உருப்படி calcium hypochlorite அல்ல ஆனால் chlorinated lime ஆக இருந்தது மற்றும் தேவைக்கு ஏற்ப வழங்கல் செய்வதற்கு வழங்குனர்கள தவறினால் சேதங்களை | -மேற்கூறியவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (x) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் வரையான 3 காலப்பகுதிகளின் போது 1 கிலோ கிராம் Tropical Chlorinated Lime (TCL) இனை கொள்வனவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட செலவினை கருத்தில் கொள்கின்ற போது 2018 ஆம் ஆண்டில் 2017 ஆம் ஆண்டில் விலையை விட 57 சதவீதம் அதிகமான விலையிலும் 2019 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டின் விலையை விட 100 சதவீதம் அதிகமான விலையிலும் Tropical Chlorinated Lime (TCL) பெறுகை செய்யப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டில் பரிந்துரைக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்டவரான மிக குறைந்த பதிலழிக்கக் கூடிய கேள்வி மனுதாரருக்கே கொள்வனவானது வழங்கப்பட்டது. | -மேற்கூறியவாறு- |

**2.4 ஒப்பந்த நிர்வாகத்தில் இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபத்தின் நிறுவன வள திட்டத்தினை (ERP) நிறுவுவதற்காக 2016 திசெம்பர் 19 அன்று தொடர்புடைய ஒப்பந்தக்காரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 49.3 மில்லியனாக இருந்தது. மற்றும் 2018 பெப்ரவரி 19 இற்குள் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (i) | கருத்திட்டத்தின் செயல்திறனானது தொடர்ச்சியாக மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் ஒப்பந்தத்தின் காலப்பகுதியானது உடன்படிக்கை திகதியிலிருந்து 3 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதியொன்றாக நீடிக்கப்பட்டிருந்தது. 3 வருடங்களின் பின்னர், 2020 பெப்ரவரி 20 அன்று உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். கருத்திட்டம் தொடர்ச்சியாக குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்தப்படாமல் இருப்பதன் காரணமாக கருத்திட்டத்தினை முடிவுறுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேற்கோள்கள் | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்த நிருவாகம் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீண்டும் கோரப்பட்டன. மற்றும் விரைவாக கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தன. | |
| (ii) | கருத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 32.36 மில்லியனை செலுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட 9 வகைகளான கணனி மற்றும் உதிரிப்பாகங்களில் 497 அலகுகள் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட கணனி மற்றும் உதிரிப் பாகங்களில் ரூபா 15.56 மில்லியன் கிரயத்திலான 07 வகைகளான 266 அலகுகள் கூட்டுத்தாபனத்தின் தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தன. மீதமுள்ள ரூபா 16.79 மில்லியன் கிரயத்திலான கணனி மற்றும் உதிரிப்பாகங்களின் 7 வகைகளில் 231 அலகுகள் 2020 யூன் 30 வரை களஞ்சியசாலையில் உபயோகமற்றவையாக இருந்தன. | தேவைப்பாட்டின் பிரகாரம் தொடர்புடைய பொருட்களை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய பொருட்களை விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | களஞ்சிய சாலைகளில் காணப்பட்ட 4 கணனி சேவையகங்களின் குறைபாடுகள் காரணமாக ஒப்பந்தக்காரர் 4 கணனி சேவையகங்களை வழங்கல் செய்வதற்கு உடன்பட்டிருந்த போதிலும், 2020 யூன் 30 வரையிலும் குறிப்பிட்ட உபகரணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | மேலே குறிப்பிட்ட கணனி சேவையகங்களினை மீண்டும் வழங்கல் செய்வதற்கு ஒப்பந்தக்காரர் இணங்கியிருந்த போதிலும், கடந்த நாட்களில் நிலவிய சூழ்நிலைகள் காரணமாக அது தாமதமாகியிருந்தது மற்றும் கணினி சேவையகங்களை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணினி சேவையகங்கள் 4 இனை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மருந்தகங்களின் செயற்பாடுகள் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் அனைத்து நடவடிக்கைகளும் இணைக்கப்பட்டிருந்த தகவல் முறைமையினை 3 வருடங்களுக்கும் அதிகமான காலத்திற்கு பின்னர் கருத்திட்டத்தின் தோல்வியானது நேரடியாக பாதித்திருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். இந்த கருத்திட்டத்தினை எடுத்துக் கொண்ட தரப்பினர்களின் தாமதங்களும் விட்டு விடுதல்களும் அந்த நிலைமைக்கு வழிவகுத்தன. குறிப்பிட்ட நிலைமையினை தவிர்ப்பதற்கு விரைவாக புதிய கருத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கருத்திட்டத்தினை வெற்றி பெறச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டமும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த விடயத்திற்கு பொறுப்பான முகாமைத்துவ கணக்காளர் பிரதி பொது முகாமையாளர் பதவியொன்றிற்கு பதவியுயர்த்தப்பட்டார். மற்றும் அதன் பின்னர் முகாமைத்துவ கணக்காளர் என்ற பதவி நீக்கப்பட்டது. ஆகவே, அடிப்படையில் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பது கடினம் மற்றும் மாற்று வழிமுறைகளினை பின்பற்றி அந்த திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தினையும் செயல் நடவடிக்கை திட்டத்தினையும் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |